# Anthropology in Tamil Culture

**Dr. L. Kumari Krishnaveni**
*Assistant Professor, Department of Tamil*
*Ayyappa Women's College, Sungankadai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255930

**Abstract**
*Anthropology can be defined as the science of knowing about humans. The Sangam period was the golden age of the Tamil people. They lived a good and noble life in the society they lived in. Tamils have the pride of living by setting limits and defining their lives. Their thought processes have become a beacon of light for life. From the beginning of humanity to the present day, the ancient Tamils were well aware of the connection between life and nature. The only constant in the world is change. Human lifestyles are changing day by day. Not only men but also women are getting involved in arts like music, dance, etc. The forms of education, dance, singing, and music that women of the Sangam period learned today have evolved and evolved to suit their economic development and practical life, and are now considered superior.*
***Keywords:*** *Culture, Belief or Faith, Habit or Custom*

**References**
1. Pooliyurkesikan, Agananuru Moolamum Uraiyum, Sarada Publications, Chennai, 2006.
2. Pooliyurkesikan, Kalittokai Moolamum Uraiyum, Sarada Publications, Chennai, 2003.
3. Pooliyurkesikan, Kuruntokai Moolamum Uraiyum, Sarada Publications, Chennai, 1996.
4. Pooliyurkesikan, Natrinai Moolamum Uraiyum, Sarada Publications, Chennai, 2021.
5. Avvai Su. Duraisami, Pattupattu - Pattinappalai, Kazhaga Publications, Chennai.
6. Pooliyurkesikan, Palaikali, Sarada Publications, Chennai, 2010.
7. Pooliyurkesikan, Purananuru, Sarada Publications, Chennai, 2006.
8. Kamala Murugan, Porunaratruppadai (Moolamum Uraiyum), Gaura Publications Group, Chennai, 2008.
9. Avvai Su. Duraisami, Pattupattu - Mullaipattu, Kazhaga Publications, Chennai.

# தமிழர் பண்பாட்டில் மானிடவியல்

***முனைவர் ல. குமாரி கிருஷ்ணவேணி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஐயப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை

***ஆய்வுச் சுருக்கம்***
*மானிடவியல் என்பது மனிதனைக் குறித்து அறியும் அறிவியல் என்று கொள்ளலாம். சங்க காலம் தமிழ் மக்களின் பொற்காலம். தாம் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் நல்ல வண்ணம் செம்மையாக வாழ்ந்துள்ளனர். வாழ்க்கைக்கு வரம்பு வகுத்து வரையறை செய்து வாழ்ந்த பெருமை தமிழருக்கு உண்டு. அவர்களின் சிந்தனைப் பொறிகள் வாழ்விற்கு ஒளிதருவனவாக விளங்கின. மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள தொடர்பினை நன்கு அறிந்திருந்தனர் பழந்தமிழர். உலகில் மாற்றம் ஒன்று தான் மாறாதது. மனிதனின் வாழ்க்கை முறைகள் நாளுக்கு நாள் மாற்றம் அடைந்து வருகிறது. ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இசை, நடனம், போன்ற கலைகளில் தம்மையும் ஈடுபடுத்தி வருகின்றனர். சங்க கால மகளிர் கற்றிருந்த கல்வி, ஆடல், பாடல், இசை போன்றவற்றின் படிமங்களே இன்று பரிணாம வளர்ச்சியால் தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற வகையிலும் மாறுதல்களைப் பெற்று மேன்மையாக விளங்குகின்றன.*
***திறவுச் சொற்கள்:*** *பண்பாடு, நம்பிக்கை, பழக்கவழக்கம்.*

## முன்னுரை

சங்க இலக்கியம் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்துக் கூறும் இலக்கியமாகும். குடும்ப வாழ்க்கையைச் சமூக அமைப்பிற்கு ஏற்றார் போல் வாழ்ந்தவர்கள் பண்டைய தமிழர்கள், மனிதம் என்றால் மனம், மனிதநேயம், அன்பு, கருணை எனப் பல பொருள் கொள்ளலாம். மனிதன் எது சரி, எது சரியில்லை என ஆராய்ந்து அறியும் திறன் கொண்டவன். அதனால் தான் ஐந்தறிவை விட ஓரறிவு கூடுதலாகப் பெற்றவனை மானுடன் என அழைக்கிறோம். இத்தகைய மனிதன் பழந்தமிழ் காலந்தொட்டு இன்று வரை சமூகத்தில் வாழ்ந்துள்ள தன்மையினை அறிந்து கொள்வதை மானிடவியல் என்கிறோம். மனிதனின் பழக்கவழக்கம், சமூக அமைப்பு, பண்பாட்டு மரபுகள், கலை, நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவை காலப்போக்கில் இயற்கையிலிருந்து மாறுபடும் தன்மையினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## சமூக அமைப்பு

பழந்தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைச் செவ்வனே செய்து வந்துள்ளனர். அறம் சார்ந்த பழக்க வழக்கத்துடன், வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்துள்ளனர். செல்வத்தின் பயனைப் பற்றிக் கூறும் போது அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் தனியே உண்ணும் பண்பைக் கொண்டவர் அல்லார் தமிழர். இதை,

**அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே (புறம்.182)**

என்ற பாடலால் அறியலாம். அதுபோல் உலகமக்கள் அனைவருக்கும் அரசனானாலும் சரி ஆண்டியானாலும் சரி உண்ணப்படும் பொருளளவு நாழி அளவே, உடுப்பதும் ஆகிய இரண்டே முக்கியமானது ஆகும். எனவே செல்வத்தின் பயன் என்பது பிறருக்கு ஈயப்படுவதே ஆகும். இதை,

***தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி***
***வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்***
***நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்***
***கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்***
***உண்பது நாழி உடுப்பவை இரண்டே***
***பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே***
***செல்வத்துப் பயனே ஈதல் (புறம்.189)***

எனும் பாடலால் அறியலாம்.

**ஆடை**

பண்டைய மனிதன் முதன்முதலாக தழைகளையே ஆடையாக அணிந்துள்ளனர். ஒவ்வொரு நில மக்களும் தத்தம் பொருள் வளத்திற்கு ஏற்ப வெவ்வேறு வகையான ஆடைகளை அணிந்துள்ளனர். பரதவ மக்கள் பசுமையான தழையாடையை உடுத்துள்ளனர் என்பதைப் பட்டினப் பாலைப் பாடலால் அறியலாம்.

***புன் தலை இரும் பரதவர்***
***பைந்தழை மா மகளிரோடு***
***(பட்டினப்பாலை 90-91)***

என்பது அப்பாடல் வரிகள். அதுபோல தினைப்புனம் காக்க வந்த மகளிர் தழை ஆடையை அணிந்து வந்தனர் என்பதை,

***தளிர் சேர் தண்தழை தை இருந்ததை***
***குளிர்வாய் வியன் புனத்து ஏற்பட வருகோ***
***(நற்.204)***

எனும் நற்றிணைப் பாடலால் அறியலாம். கால மாற்றத்திற்கேற்ப தற்போது ஆடை அணிவதிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**உணவு**

உணவில்லா மனிதன் உயிரற்ற மனிதனாவான் என்பது வழக்கு. பழந்தமிழர் உணவுப் பொருள்களைப் பிறருக்குக் கொடுத்துண்ணும் வழக்கம் உடையவர்கள். இவர்கள் சுவைமிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் கைதேர்ந்தவர்கள். அவரவர்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு வகைகளும் வேறுபட்டன. சைவ, அசைவ உணவுகளை உண்டுள்ளனர். பழந்தமிழ் மக்கள் உளுந்தம் பருப்புடன் பொங்கலையும் தேனையும் கலந்து இனிய பாலுடன் உண்டுள்ளனர். இதை,

***தேன் கலந்து அளைகிய தீம்பால்***
***(அகம்.207)***

என்ற பாடலால் அறியலாம்.

குறிஞ்சி நில மக்கள் இயற்கையாக விளைந்த பழங்கள், கிழங்குகளையும் மலையில் வாழும் மான், பன்றி, முயல் போன்றஉயிரினங்களையும்உண்டுள்ளனர். முல்லை நில மக்கள் பாலுடன் அரிசி சோறு, அவரை விதை, வரகரிசி சோறு, பருப்பு, நெய், பால், தயிர், மோர், வெண்ணையும் உணவுப் பொருளாகக் கொண்டுள்ளனர். மருதநில மக்கள் நெல்லரிசி, காய், கீரைகள், நீர்வாழ் உயிரினங்களான நண்டு, மீன் போன்றவற்றையும் உண்டுள்ளனர். நெய்தல் நில மக்கள் நெல்லை இடித்து மாவாக்கி அத்துடன் பன்றி, மீனையும், கள்ளையும் உணவாகக் கொண்டுள்ளனர். ஆனால் இன்றைய காலகட்டத்தில் எல்லா வகையான உணவு வகைகளையும் எல்லோரும் அவரவர் விருப்பப்படி சமைத்துண்ணும் பழக்கத்தைக் காணலாம்.

**பழக்க வழக்கம்**

மக்கள் கூட்டமாக அதாவது கூட்டுக் குடும்பமாக வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகும். கூட்டத்தினரிடையே இருக்கும் ஒரு பழக்கம் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டால் அது வழக்கமாக மாறும். காலமாறுபாட்டாலும், அவரவர் வாழும் இடம், சூழல், தொழில், பிறரோடு கொள்ளும் தொடர்பு ஆகியவற்றால் இந்தப் பழக்கம் மாறுபடக் கூடும். இல்லையென்றால் அதுவே சமூக பழக்கமாக மாறிவிடும். தமிழர்கள் விருந்தோம்பலைத் தங்களுடைய கடமைகளில் ஒன்றாகக் கருதினர். சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் பண்பு சிறந்த பழக்கமாகக் போற்றப்படுகிறது. உதாரணமாக பொருநராற்றுப்படை

பலவகையான உணவினை வீண்மீன்கள் போல பரப்பி வைத்து, விருந்தினர்கள் விரும்பியதை அவர்களின் முகக் குறிப்பறிந்து கொடுக்கும் பழக்கம் இருந்ததை,

***கேளிர் போல கேள் கொளல் வேண்டி***
***வேளாண் வாயில் வேட்ப கூறி***
***கண்ணில் காண நண்ணு வழி இரீஇ***
***பருகு அன்ன அருகா நோக்கமோடு***
***(பொரு.74-78)***

என்ற வரிகளால் அறியலாம். அதுபோல விருந்தினர்கள் ஒரு நாள் அல்ல, இருநாள் அல்ல, பல நாள்கள் பலரோடு சென்றாலும் முகம் கோணாமல் முதல்நாள் இருந்த அதே விருப்பத்துடன் விருந்தினரை எதிர்கொள்ளும் பழக்கமுடையவர்கள் தமிழர்கள், இதை,

***ஒரு நாள் செல்லலம் இரு நாள் செல்லலம்***
***பல நாள் பயின்று பலரொடு செல்லினும்***
***தலை நாள் போன்ற விருப்பினன்மாதோ***
***(புறம்.101)***

எனும் பாடலால் அறியலாம்.

முல்லைப்பூவானது மிக மென்மையானது. நல்ல மணமும் தூய்மையானதும் கூட, இதனால் முல்லை மலரைக் கற்புக்கு அடையாளமாகப் பழந்தமிழர் கொண்டனர் என்பது செய்தி. இதனால் பெருமுது பெண்டிர் நெல்லோடு முல்லை மலரையும் சேர்த்து தெய்வத்தை வழிபடும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை முல்லைப்பாட்டின் வழி அறியலாம்.

***நாழி கொண்ட நறுவீமுல்லை***
***அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது***
***பெருமுது பெண்டிர்....***
***(முல்லைப்பாட்டு.9-11)***

என்ற வரியால் தலைவனைப் பிரிந்த தலைவி ஒழுக்கம் தவறாமல் தலைவனுக்காகக் காத்திருக்கிறாள் என்ற குறிப்பை வெளிப்படுத்துவதையும் அறியமுடிகிறது. இன்றைய காலத்தில் விருந்தோம்பல் என்பது பல புதுமைகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. தலைவனைப் பிரிந்திருக்கும் சில தலைவியின் செயல்களிலும் மாற்றங்களைக் காணமுடிகிறது.

**பண்பாட்டு மரபுகள்**

உயிரும் உடலும் போன்றவர் கணவன் மனைவியர். கண்கள் இரண்டும் ஒரே நேரத்தில் ஒரு பொருளைப் பார்ப்பது போல் அன்புடைய கணவனும் மனைவியும் தம்முன் கருத்து மாறுபாடு இல்லாமல் தாம் செய்யும் செயலை ஒருமித்து செய்வார்கள். கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு வாழாத போது பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இல்லற வாழ்வில் கணவன் மனைவி அன்பானது ஒத்த அன்புடன் ஒருவரை ஒருவர் புரிந்து பொண்டும் விட்டுக் கொடுத்தும் வாழ்வதே சிறந்த வாழ்வாகும். இருவரும் பிரியாது அன்புடன் வாழ வேண்டும், வறுமையிலும், எத்தகைய சூழ்நிலையிலும் அன்பு மாறாமல் வாழ வேண்டும். இதை,

***ஒன்றான் கூறாடை உடுப்பவரே ஆயினும்***
***ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை***
***(கலி.8)***

என்ற கலித்தொகை பாடலால் அறியலாம். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய மனமொத்த இல்லறவாழ்க்கை வாழும் மக்களைக் காண்பது அரிதே. மணம் முடித்த சில மாதம், சில ஆண்டுகளிலே இருவேறு திசைகளாகப் பிரிந்து விடுகின்றனர். தவிர திருமணத்திற்கு முன்பே ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்றனர். தங்களால் வாழ்க்கையில் தொடர்ந்து இணைந்து வாழ முடியும் என்றால் மணம் முடித்துக் கொள்கின்றனர். இல்லையென்றால் பிரிந்துவிட்டு அடுத்த வாழ்க்கையத் தேடிக் கொள்கின்றனர். இதுதான் இன்றைய காலகட்ட வாழ்க்கை மேலாண்மை.

சங்க கால மக்கள் மனதொத்த வாழ்க்கையை இயற்கையோடு இயைந்ததாக வாழ்ந்துள்ளனர். சாதாரண நிகழ்ச்சியைக் கூட தங்களின் கடமையாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர்.

இயற்கை பொருள்களை எல்லாம் கடவுளின் அம்சமாகவே கண்டுள்ளனர். மரத்தைக் கடவுளாக வழிபட்ட தன்மையை காணலாம். இதை,

***மன்ற மரா அத்த பேஎதிர் கடவுள்***

***(குறுந்.87)***

என்ற வரியால் அறியலாம். காலப்போக்கில் மரத்தின் அடியில் சிலை வைத்து வழிபடும் வழக்கத்தை இன்றளவும் காணலாம். இறைவனுக்குப் படையல் கொடுப்பது என்பது அன்றைய காலத்தில் இருந்தே காணப்பட்ட வழக்கமாகும். தமிழ் மக்கள் இறைவனிடம் வேண்டுதல் கேட்க, அதை நிறைவேற்றியதைக் குறுந்தொகை பாடல் ஒன்றால் அறியலாம்.

***புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்***
***கடியுண் கடவுட் கிட்ட ஓழுங்குரல்***

***(குறுந்.105)***

என்பது பாடல். இப்பாடலில் தன் புனத்தில் விளையும் பயிர் விளைச்சலானது நன்றாக விளைந்தால் முதல் விளைச்சலைக் கடவுளுக்குத் தருவதாகக் கூறி, அவ்வண்ணமே கதிர்கள் முற்றி விளைந்தவுடன் இறைவனுக்குப் படைத்து மகிழ்வதைக் காணலாம். இன்றை காலத்திலும் இதுபோன்ற வேண்டுதல்களும், அதை நிறைவேற்றும் பழக்கமும் மக்களிடையே பழக்கத்தில் உள்ளதைக் காணலாம்.

பழந்தமிழ் மக்கள் திருமணத்தின் போது தீ வளர்த்தி நெய் ஊற்றி வேத மந்திரங்கள் கூறி அக்கிணி சாட்சியாக மணம் முடித்துள்ளனர். இன்றும் திருமணங்கள் அக்கினி வளர்த்தி நடத்துவதைக்காணலாம். மேலும்தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து வாழும் காலக் கட்டத்தில் அஃறிணை பொருள்களோடு தன் மனவேதனையைப் பேசுவதாகவோ, தூது அனுப்புவதாகவோ செய்திகளைக் காணலாம்.

***சால்பும் செம்மையும் உடையை ஆதலின்***
***நிற் கரந்து உறையும் உலகம் இன்மையின்***
***எற் கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்!***
***நற் கவின் இழந்த என் தோள் போல் சாஅய்***
***சிறுகுபு சிறுகுபு செரீஇ***
***அறி கரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே***

***(நற்.196)***

என்ற பாடலில் தலைவனைப் பிரிந்து துயருறும் தலைவி தனது மனவேதனையை நிலைவை நோக்கி கூறுவதாக நற்றிணை பாடல் வழி அறியலாம். இன்றைய கணவன் மனைவிக்கு இந்த நிலை ஏற்பட வாய்ப்பு இல்லை. ஏனெனில் எல்லாருடைய கை களாலும் கைப்பேசி இருப்பதால் எந்த நேரத்திலும், எத்தகைய சூழ்நிலையிலும் ஒருவருக்கொருவர் தங்களின் உணர்ச்சி களைப் பேசி பரிமாறிக் கொள்ளலாம்.

தமிழர்கள் தாம் வாழும் காலங்களில் மற்றவர்களுக்குத் துன்பம் இழைக்காமல் பகுத்துண்டு வாழ வேண்டும் என்ற உயரிய கருத்தைக் கொண்டவர்கள் என்பதை சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. பரிசில் பெற்ற பாணன் ஒருவன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று எண்ணாமல் பரிசில் பெற விழையும் மற்ற பாணர்களைத் தனக்கு பரிசில்களை வாரி வழங்கிய மன்னனிடம் ஆற்றுப்படுத்தி அனுப்பும் செய்தியை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். அதுமட்டுமல்ல, பரிசில் பெற்ற புலவன் ஒருவன் வறுமையிலும் தான் கொண்டு வந்த பொருள்களைத் தன் மனைவியிடம் கொடுத்து, இதைத் தனக்காகப் பாதுகாக்காமல் எல்லோருக்கும் கொடுத்து உதவுக; எனச் சொல்லும் தன்மையைப் பார்க்கும் போது ஒருவருக்கொருவர் உதவி செய்யும் பண்பு அன்றைய தமிழர்களிடம் இருந்ததைக் காணலாம். இதை,

***வல்லாங்கு வாழ்த்தும் என்னாது நீயும்***
***எல்லார்க்கும் கொடுமதி மனைக் கிழவோயே***

***(புறம்.169)***

எனும் பாடலால் அறியலாம். இந்தக் காலத்தில் இப்பண்பினைக் காண்பது அரிதே.

**நம்பிக்கைகள்**

பழந்தமிழர்கள் வாழ்க்கையில் பல்வேறு நம்பிக்கைக் கொண்டவர்களாக, வாழ்ந்து ளளனர். சகுனம்பார்த்தல், விரிச்சிகேட்டல், பல்லியின் குரல், கண்கள் துடித்தல், காக்கை கரைதல், போன்றவற்றில் எல்லாம் அதிகம் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.

**இனை நலம் உடைய கானம் சென்றோர்**
**புனை நலம் வாட்டுநர் அல்லர்; மனை வயின்**
**பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன**
**நல்எழில் உண் கண்ணும் ஆடுமால் இடனே**
***(பாலைக்கலி.11)***

எனும் பாடலில் தலைவன் பொருள் ஈட்டு வதற்காகச் சென்ற பாலைநிலம் மிகக் கடுமையானது என்றும் காட்டு வழியில் யானையும், புறாவும், மானும் தத்தம் காதலியரை அன்புடன் பேணுவதைக் காண்பார். அந்நிகழ்ச்சியைக் காணும் நம் தலைவன் நாம் வாடும்படி விடமாட்டார். நான் கூறுவதை வீட்டினுள் பல்லியும் ஆமோதிப்பது போல ஒலி செய்கின்றது. என் இடக்கண்ணும் துடிக்கிறது. இவை இரண்டும் நல்ல சகுனங்கள் எனக் கூறுவதை அறியலாம்.

மக்களிடையே இயற்கை சார்ந்த நம்பிக்கைகளும் இருந்துள்ளது. வெள்ளி எனும் விண்மீன் தென்திசை இருந்தால் மழை பெய்யாது என நம்பினர். இதை,

**வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்க ஏகினும்**
***(பட்டினப்பாலை. 1-2)***

என்ற வரிகளால் அறியலாம். செய்யும் செயல் வெற்றி பெற நல்ல நாள், நல்ல நேரம் பார்க்கும் நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். அரசனும், வீரர்களும் போருக்குச் செல்லும் முன் பறவைகளைச் சகுனம் பார்க்கும் வழக்கமும் இருந்துள்ளது. இதை,

**புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**
***(புறம்.204)***

எனும் பாடலால் அறியலாம். இன்றும் இத்தகைய சகுனம் பார்க்கும் நம்பிக்கை, மக்களிடையே தாம் காணலாம்.

**கலை மற்றும் சடங்குகள்**

சங்க கால மக்கள் சகல அறிவும் பெற்றிருந்தனர். சங்க காலத்தில் இசையும், நடனமும் பெண் கல்வியுடன் இணைந்தே இருந்துள்ளன. ஆற்றுப்படை நூல்களைப் பார்த்தால் ஆடியும், பாடியும் விறலியர் மக்களை மகிழ்வித்ததற்கான செய்தியை அறியலாம். மகளிர் இயற்கையாகவே இனிமையான குரல்வளமும், பாடலுக்கு ஏற்ப ஆடும் திறனையும் கொண்டவர்.

**ஒலியல் வார்மயில் உளரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கிய குறிஞ்சி பாடக்**
**குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற்ற ஓய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும்**
***(அகம்.102)***

என்ற அகப்பாடலில் கொடிச்சியானவள் குறிஞ்சிப்பண் பாட அதனைக் கேட்ட யானை அவ்விடத்தை விட்டு அகலாது நின்ற செய்தியை அறியலாம்.

சங்க கால மகளிர் கூத்து ஆடுவதிலும் சிறந்து விளங்கினர். என்பதை,

**துணங்கை நாளும் வந்தன *(குறுந்.364)***

என்ற பாடல் அடிகள் மூலம் மகளிரின் நடனக் கலையைப் பற்றி எடுத்தியம்புகிறது. தவிர இன்னிசைக்கேற்ப கழைகளில் கட்டப்பட்ட கயிற்றில் நடனம் ஆடிய செய்தியை,

**கழைபாடு இரங்க பல்லியம் கறங்க**
**ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன் கயிற்று**
***(நற்.95)***

என்ற பாடலால் அறியலாம். இன்றும் மக்கள் கழைக்கூத்தாடும் நிகழ்ச்சியை ஆங்காங்கே நாம் காணமுடிகிறது.

மனித சமுதாயத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகள் இடம் பெறுகின்றன. திருமணத்திற்கான நாளைத் தேர்ந்தெடுத்து முகூர்த்தம் பார்த்து இசைக்

கருவிகள் முழங்க பொன்னாலான தாலியை அணிவித்து மணச்சடங்கினை நடத்துகின்றனர். அடுத்து பெண் கருவுற்ற காலம் முதல் பத்து மாதம் வரையிலும் பல சடங்குகளை நடத்துகின்றனர். இவ்விதம் மனிதனின் கடைசிகால இறப்பிலும் பல விதமான சடங்குகளை நடத்துகின்றனர். இறந்தவர்களை எரிப்பதும், அவர்கள் ஞாபகமாக அன்று நடுகல் நட்டனர். இன்றோ கல்லறை கட்டுகின்றனர்.

## முடிவுரை

பழந்தமிழர்கள் மானுட வாழ்வியல் சார்ந்த அறநெறிப் பண்புகளையும், சிறப்பான சமூக ஒழுக்கங்களையும், நம்பிக்கை, பழக்கவழக்கம் எனப் பல நிலைகளில் அறம் தவறாமல் வாழ்த்துள்ளனர். மக்கள் தாங்கள் வாழ்கின்ற காலங்களில் பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யவே கூடாது என்ற கட்டுப்பாட்டைக் கொண்டவராக வாழ்ந்துள்ளனர். ஆனால் இன்றைய கால கட்டமோ இவை எல்லாவற்றையும் முற்றிலுமாக மாற்றும் விதத்தில் காணப்படுகின்றன. தான் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். வயது தராதரம் இல்லாமல் அறம் கெட்டு, மதி கெட்டு கால்போன போக்கில் வாழும் மனிதர்களையே காண்பது மனித நேயம் மறந்து போன காலமா? இல்லை அறிவியல் வளர்ச்சியின் தாக்கமா? என்பதை அறிய முடியவில்லை. இதுதான் இன்றைய கால கட்ட மானிடவியல்.

## துணைநூற்பட்டியல்


1. பூலியூர்க்கேசிகன், அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2006.
2. பூலியூர்க்கேசிகன், கலித்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2003.
3. பூலியூர்க்கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 1996.
4. பூலியூர்க்கேசிகன், நற்றிணை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2021.
5. அவ்வை சு. துரைசாமி, பத்துப்பாட்டு - பட்டினப்பாலை, கழக வெளியீடு, சென்னை.
6. பூலியூர்க்கேசிகன், பாலைக்கலி, சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
7. பூலியூர்க்கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை, 2006.
8. கமலா முருகன், பொருநாராற்றுப்படை (மூலமும் உரையும்), கௌரா பதிப்பகம் குழுமம், சென்னை, 2008.
9. அவ்வை சு. துரைசாமி, பத்துப்பாட்டு - முல்லைப்பாட்டு, கழக வெளியீடு, சென்னை.